DINATHANTHI 11 NOV 09

### ஈஷா அறக்கட்டளை சார்பில்

# மாநகராட்சி பள்ளி ஆசிரியர்களுக்கு பயிற்சி

கோவை,நவ.11–

ஈஷா அறக்கட்டளை சார்பில் மாநகராட்சி பள்ளி ஆசிரியர்களுக்கு தொழில்நுட்ப பயிற்சி வகுப்புகள் நேற்று தொடங்கியது. சித்தாபுதூர் மாநகராட்சி பள்ளி, ராமகிருஷ்ணாபுரம் அரசு மேல்நிலைப்பள்ளி, ஆர்.எஸ்.புரம் அம் மணியம்மாள் பள்ளி ஆகிய 3 பள்ளிகளில் வருகிற 21–ந் தேதி வரை நடைபெற உள்ளது. சத்குருவின் வழிகாட்டுதலின் வடிவமைக்கப் பட்டுள்ள இந்த பயிற்சியின் மூலம் ஆசிரியர்க ளுக்கு சுயவளர்ச்சி, உற்பத்தித்திறன், உள்வாங் கும் திறன், சிக்கலான சூழல்களை நிர்வகிக்கும் திறன் மேம்பாட்டிற்கு பயிற்சிகள் அளிக்கப் பட்டு வருகிறது. இதன்மூலம் மன அழுத்த மின்மையை உணரும் சூழ்நிலைகள் உரு வாக்கப்படுவதால் செயல்திறன் மேம்பட்டு சமுதாயத்தில் தனிமனிதராகவும், குழுவாக வும் சிறப்பாக செயல்படும் திறமை வளர்க்கப் படுகிறது.

இந்த பயிற்சியில் 500–க்கும் மேற்பட்ட ஆசி ரியர்கள் கலந்து கொண்டு பயிற்சிபெற்று வரு கிறார்கள். இந்த தகவலை ஈஷா அறக்கட் டளை நிர்வாகி பாலசந்திரன் தெரிவித்து உள்ளார்.